# RURAL WORKERS DEVELOPMENT SOCIETY (RWDS)

# ஆண்டறிக்கை





## 2019-2020




19A, R.R.SETHUPATHI NAGAR, RAMANATHAPURAM – 523501.

# பொருளடக்கம்


- ❖ இராமநாதபுரம் மாவட்டம் வரைபடம்
- ❖ நிறுவனத் தகவல்
- ❖ அறிமுகம்
- ❖ நிறுவன அமைப்பு
- ❖ செயல் அறிக்கை
- ❖ அடைவுகள்
- ❖ பத்திரிக்கை செய்திகள்
- ❖ வரவு - செலவு தணிக்கை அறிக்கை

**இராமநாதபுரம் மாவட்ட வரைபடம்**



| நிறுவனத் தகவல் | |
|---|---|
| நிறுவனத்தின் பெயர் | ரூரல் வொர்க்கர்ஸ் டெவலப்மெண்ட் சொசைட்டி (RWDS) |
| பதிவு எண் | 93/2007 தமிழ்நாடு சங்க பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. |
| முகவரி | 19A, RR சேதுபதிநகர், இராமநாதபுரம் - 623501 |
| அலைபேசி / தொலைபேசி எண் | 9443783341, 04567-223535 |
| முதன்மை நிர்வாகி | வெ.சௌந்திரமாலதி |
| வங்கியின் பெயர் | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி. இராமநாதபுரம். |
| | தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, இராமநாதபுரம் |
| | கரூர் வைஷ்யா வங்கி, பாரதிநகர் கிளை |
| மின்னஞ்சல் | palmyrahrwds@gmail.com |
| இணையத்தளம் | www.rwdsramnad.org |
| PAN எண் | AAAAR6899M |
| FCRA எண் | 075990100 |
| 12 AA பதிவு எண் | C.NO.101/179/CIT-II/2008-09 |
| 80 G பதிவு எண் | C.No.102/179/CIT-II/2008-09 |
| TAN பதிவு எண் | MRIR02580E |
| UNIQUE ID: | TN/2017/0165744 |

## *செயற்குழு உறுப்பினர்கள் விபரம்*

| *வ.எண்* | *பெயர்* | *பொறுப்பு* |
|---|---|---|
| 1 | திரு. டி.ஆர். சந்திரன் அவர்கள் | தலைவர் |
| *2* | திரு. வெ.சௌந்திரமாலதி அவர்கள் | செயலாளர் |
| *3* | திருமதி.ஞா.பசுபதி அவர்கள் | பொருளாளர் |
| *4* | திரு.பொ.சுப்பிரமணியன் அவர்கள் | துணைத்தலைவர் |
| *5* | திரு.ச.சத்தியசேகரன் அவர்கள் | உறுப்பினர் |
| *6* | திரு.பா.கண்ணன் அவர்கள் | உறுப்பினர் |
| 7 | திருமதி.அ.பசீரா பர்வீன் அவர்கள் | உறுப்பினர் |

## *பொதுக்குழு உறுப்பினர்கள் விபரம்*

| *வ.எண்* | *பெயர்* | *பொறுப்பு* |
|---|---|---|
| 1 | திரு. டி.ஆர். சந்திரன் அவர்கள் | தலைவர் |
| *2* | திருமதி.வெ.சௌந்திரமாலதி அவர்கள் | செயலாளர் |
| *3* | திருமதி. ஞா.பசுபதி அவர்கள் | பொருளாளர் |
| *4* | திரு.பொ.சுப்பிரமணியன் அவர்கள் | துணைத்தலைவர் |
| *5* | திரு. ச.சத்தியசேகரன் அவர்கள் | உறுப்பினர் |
| *6* | திரு.பா.கண்ணன் அவர்கள் | உறுப்பினர் |
| *7* | திருமதி.அ.பசீரா பர்வீன்அவர்கள் | உறுப்பினர் |
| *8* | திருமதி.து.கனகவள்ளி அவர்கள் | உறுப்பினர் |
| *9* | திருமதி.ந.ராஜமணி அவர்கள் | உறுப்பினர் |

# நிறுவன அமைப்பு


மேலாண்மைக் குழு

இயக்குநர்

கணக்காளர் | ஒருங்கிணைப்பாளர் | ஆவணத்தொகுப்பாளர்

மேம்பாட்டுப்பணியாளர்கள்

**ORGANGRAM OF THE RURAL WORKERS DEVELOPMENT SOCIETY**



# ஆண்டறிக்கை 2019 —— 2020

**முகவுரை**

ரூரல் வொர்க்கர்ஸ் டெவலப்மென்ட் சொசைட்டி நிறுவனம் 2007ம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சமூக ஆர்வலர் குழுவினால் துவக்கப்பட்டது. இக்குழுவானது கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஒடுக்கப்பட்ட பனைத்தொழிலாளர் மக்களின் மேம்பாட்டுக்காக பணி செய்து வருவது குறிப்பிடத்தக்கது. இது தமிழ்நாடு சங்கப்பதிவுகள் சட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது —— பதிவு எண்: 93/2007. இதன் தலைமையகம் இராமநாதபுரத்தில் உள்ளது. இந்நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள குழந்தைகள், பெண்கள், இளைஞர்கள், விவசாயிகள் மற்றும் கிராமப்புற ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர்கள் குறிப்பாக பனைத்தொழிலார்கள் மத்தியில் பணி செய்து வருகிறது.

**பணித்தளம்:**

மாநிலம்: தமிழ்நாடு

மாவட்டம்: இராமநாதபுரம்.

ஒன்றியங்கள்: இராமநாதபுரம், கடலாடி, திருப்புல்லானி, மண்டபம், பரமக்குடி, போகலூர், திருவாடனை, ஆர்.எஸ்.மங்கலம், முதுகுளத்தூர், கமுதி மற்றும் நைனார்கோவில்.

**தொலைநோக்குப் பார்வை :**

தமிழகத்தில் பனைத்தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அவர்களை சமூக, பொருளாதார ரீதியில் மேம்பாடு அடையச் செய்வதாகும்

**இலட்சியம் :**

- ஜாதி, மதம், இனம், அரசியல் இவைகளுக்கு அப்பாற்பட்டு அனைத்து பனைத்தொழிலாளர்களையும் ஒருங்கிணைத்து வாழ்வாதார மேம்பாடடிற்காக பாடுபடுதல்
- தங்களின் தற்போதைய நிலையை உணர்ந்து மேம்பட்ட நிலையை அடைய தேவையான அனைத்து திட்டங்களையும் வகுத்து வளர்ச்சித் திட்டங்களில் அவர்களையும் பங்கேற்க வைத்தல்.
- பனைத்தொழிலாளர்களை அரசு மற்றும் இதர துறைகளுடன் இணைத்து விடுதல்.
- இக்கால குழந்தைகள் வரும் காலத்தில் மாண்புடனும் நலமுடனும் வாழ குழந்தை உரிமைகளை நிலைநிறுத்துதல்
- மேற்கண்ட நோக்கங்களை அடைய ரூரல் வொர்க்கர்ஸ் டெவலப்மென்ட் சொசைட்டி (RWDS) கீழக்கண்ட அணுகுமுறைகளில் பணிசெய்கிறது.
- பனைத்தொழிலாளர்களை ஒன்று திரட்டுதல் மற்றும் ஒருங்கிணைத்தல்
- கிராமம், வட்டார, மாவட்ட சங்கங்களை உருவாக்குதல் மற்றும் தொடர்ந்து செயல்படத் தூண்டுதல்
- பனைத்தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களுடைய குழந்தைகளின் உரிமைகளை வென்றெடுக்க இணைந்த செயல்பாடுகள் முன்மாதிரி முயற்சிகளை மேற்கொள்ள எளிதமைத்து கொடுத்தல்.

**பணித்தள அறிமுகம்:**

இராமநாதபுரம் மாவட்டம் தென்தமிழகத்தின் கிழக்கு கடற்கரையோரமாக அமைந்துள்ளது. இது 4232ச.கி.மீ பரப்பளவு கொண்டது. இதன் மக்கள் தொகை 12,58,772. இது 11 வளர்ச்சி ஒன்றியங்களாகவும் 7 தாலுகாக்களாவும் பிரிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் வறுமை, வறட்சி ஆகியவற்றால் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இம்மாவட்டத்தில் மொத்த மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட இனத்தவர் 28% மும் குழந்தைகள் 27.2% மும் உள்ளனர்.

எங்களின் பணித்தள கிராமங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தின் கிராமப்புற பகுதிகளை உள்ளடக்கியது. குடிதண்ணீர் என்பது மிகப்பெரிய பிரச்சனையாக உள்ளது. பெண்கள் குடிதண்ணீருக்காக பல மைல் தூரம் கால்நடையாக நடந்து தலையில் சுமந்து வருகின்றனர். முக்கியமாக குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான கல்வி சுகாதாரம் போன்றவை எட்டாக்கனியாகவே உள்ளன. அரசு இப்பிரச்சனையில் உரிய முனைப்பு காட்டுவதில்லை. மேலும் இராமநாதபுரம் மாவட்டம் சமூக பொருளாதார அளவில் ஒரு பின்தங்கிய பகுதியாக உள்ளது.

| | | |
|---|---|---|
| பணி செய்யும் பகுதிகள்: | மாவட்டம் | - 1 |
| | ஒன்றியம் | - 9 |
| | கிராமங்கள் | - 110 |
| | பஞ்சாயத்து | - 75 |

# செயல்பாடுகள்

**1.பனைத்தொழிலாளர்கள் சங்கக் கூடுகை :**

RWDS பணி செய்யும் கிராமங்களில் உள்ள பனைத்தொழிலாளர்கள் கிளைச்சங்கங்களில் பனைப்பொருட்களை மதிப்புக்கூட்டுப்பொருள்களாக தரம் உயர்த்துதல் மற்றும் சந்தைபடுத்துதல், குழந்தைத்தொழிலாளர் முறை எதிப்பு மற்றும் குழந்தைகள் தொழிலாளர்கள் ஆவதை தடுப்பது குறித்தும் தீர்மானஙகள் நிறைவேற்றப்பட்டது. கடந்த ஆண்டில் 151 கிராம கிளைச்சங்கங்களில் 3124+7713=10445 உறுப்பினர்கள் பங்கேற்புடன் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாண்டு சங்கம் உறுப்பினர்களின் சிறப்பான செயல்பாட்டின் வாயிலாக ஒரு பள்ளி இடைநின்ற குழந்தை மற்றும் இரண்டு குழந்தைத்தொழிலாளர்களை மீண்டும் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளது.



**2.சிறுவர் மன்றங்கள் மற்றும் கூடுகைகள் :**

குழந்தைகளின் பங்கேற்பு உரிமையை உறுதி செய்யவும், அவர்களுக்கு சமூக கல்வியை கற்றுக்கொடுக்கவும் சிறுவர் மன்றங்கள் செயல்படுகின்றன. ஒவ்வொரு சிறுவர் மன்றங்களிலும் அக்கிராமத்தில் உள்ள 8 முதல் 18 வயது வரையிலான குழந்தைகள் உறுப்பினர்களாக உள்ளனர். மாதம் இருமுறை கூடும் இம்மன்றத்தில் குழந்தைகள் தங்களின் பள்ளி அனுபவங்களை பகிர்ந்து கொள்கின்றனர், தங்களின் தேவைகள் மற்றும் பிரச்சனைகள் பற்றி விவாதிக்கின்றனர். மேலும் குழுவாக இணைத்து குழந்தைகளுக்கான புத்தகங்களை வாசித்தல் மற்றும் அதன் கருத்துக்களை விவாதித்தல் ஆகியன நடைபெறுகின்றது. குழுவாக இணைந்து பாரம்பரிய கிராம விளையாட்டுக்களை விளையாடுதல் பொது விசயங்கள் குறித்து பேசுதல் ஆகியனவும் நடைபெறுகின்றது. 52 கிராமங்களிலும் 52 சிறுவர் மன்றக் கூட்டங்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது .

இந்த வருடம் சிறுவர் மன்றங்களில் சிறப்பு பயிற்சியாக குழந்தைகள் மையத் தொகுதி (Child centre modules) - வாழ்க்கை கல்வி - சுய பொறுப்புணர்வு, சுய அடையாளம், சுய மரியாதை,

தன்னம்பிக்கை, குழந்தைகள் பங்கேற்பு, ஆக்கப்பூர்வமான சிந்தனைகள், பகுப்பாய்வு மற்றும் அறிவியல் பூர்வமான கலந்துரையாடல்கள், குழந்தைகளின் வளர்ச்சி நிலைகள், பாலின பிரச்சினைகள் குறித்தான விழிப்புணர்வு, அறிவியல் சிந்தனைகள், குழந்தைகளை பாதிக்கும் காரணிகள் போன்றவை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும் இந்த வருடம் சிறப்பாக 52 சிறுவர் மன்றங்களிலிருந்தும் சிறுவர்கள் வருவிக்கப்பட்டு வாலிபால், கபடி, கோ கோ, கேரம் மற்றும் சதுரங்கம் விளையாட்டுகளுக்கான கீழக்கரை, சாயல்குடி, காவாகுளம், கன்னிராஜபுரம், உச்சிப்புளி, திருப்புல்லாணி வட்டார அளவிலான விளையாட்டு குழுக்கள் உருவாக்கப்பட்டன. மேலும் வட்டார அளவிலான விளையாட்டு வீரர்களை ஒருங்கிணைத்து கடலாடி, திருப்புல்லாணி மற்றும் மண்டபம் ஒன்றிய அளவிலான குழுக்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.






### 3. வளரிளம் குழந்தைகள் குழுக் கூடுகைகள் :

பனைத்தொழிலாளர் கிராமங்களில் உள்ள 11 வயது முதல் 18 வயது வரை உள்ள ஆண் பெண் குழந்தைகளை ஒருங்கிணைத்து அவர்களுக்கான சிறப்பு கூடுகைகள் நடைபெற்று வருகின்றன. வளரிளம் குழந்தைகளுக்கான மனோவியல் மற்றும் உடலியல் சார்ந்த கல்வி மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. வளரிளம் வயதில் தான் குழ்நதைக்ள கல்வியை இடைநிறுத்தம் செய்து தொழிலாளர்களாக மாறுகின்றனர். எனவே அவர்களுக்கான கல்வியை தொடார்ந்து கற்பதற்கும், குழந்தைகள் வேலைக்கு செல்வதில் உள்ள சிரமம் மற்றும் ஆபத்துகள் குறித்தும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. உடல் சுத்தம் மற்றும் ஆரோக்கிய வாழ்விற்கான ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு 11 கிராமங்களில் அமைக்கப்பட்டு 28 கூடுகைகள் நடத்தப்பட்டுள்ளது. அதில் 282 பள்ளி செல்லும் குழந்தைகளும் 36 குழந்தைத்தொழிலாளர்களும் கலந்து கொண்டுள்ளனர். இதன் மூலம் கல்வியின் முக்கியத்துவம் குறித்தும், குழந்தைகள் வேலைக்கு செல்வதனால் உள்ள சிரமம் மற்றும் ஆபத்துகள் குறித்தும் விழிப்புணர்வு பெற்றுள்ளனர்.

**4. வளரிளம் பெண் குழந்தைகள் குழுக் கூடுகைகள்:**

பனைத்தொழிலாளர் கிராமங்களில் உள்ள 11 வயது முதல் 18 வயது வரை உள்ள பெண் குழந்தைகளை ஒருங்கிணைத்து அவர்களுக்கான சிறப்பு கூடுகைகள் நடைபெற்று வருகின்றன. வளரிளம் குழந்தைகளுக்கான மனோவியல் மற்றும் உடலியல் சார்ந்த கல்வி மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. வயது வந்த பெண் குழந்தைகளுக்கான தன்சுத்தம், ஹார்மோன் சுரப்புகள், உடலியல் மற்றும் மனோவியல் மாற்றங்கள் குறித்து ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. இந்த வருடம் 11 கிராமங்களில் காந்திநகர், மேலக்கிடாரம், கன்னிகாபுரி, காமராஜபுரம், மேதலோடை, புதுமாயாகுளம், பூப்பாண்டியபுரம், மாணிக்கநகர், அடஞ்சேரி, அலைகாத்தவலசை மற்றும் அம்மாபட்டிணம் ஆகிய கிராமங்களில் நடைபெற்றது. இதில் 102 பெண் குழந்தைகள் கலந்து கொண்டு சுய மதிப்பீடு, சுய பொறுப்புறுப்புணர்வு மற்றும் சுய மரியாதை பற்றி கற்றறிந்தனர்.

இந்த வருடம் குற்றாலம் கிறிஸ்து குல ஆசிரமத்தில் 27-12-2019, 28-12-2019 மற்றும் 29-12-2019 ஆகிய நாட்களில் வளரிளம் பெண்குழந்தைகளுக்கான திறன் வளர் பயிற்சி நடைபெற்றது. இதில் 20 குழந்தைகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

இக்கூடுகைகளில் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு தன்னம்பிக்கை மற்றும் முடிவெடுக்கும் திறன் வளர்ந்தன் விளைவாக கன்னிகாபுரி கிராமத்தல் ஒரு பெண்குழந்தை 17 வயதில் தனக்கு நிச்சயப்பட்ட திருமணத்தை தடுத்தி நிறுத்தி தற்பொழுது தனது கல்லூரி கல்வியை பெற்றுள்ளார்.






## 5. மாலைநேரக்கல்வி :

குழந்தைகளுக்கு பள்ளிகளில் ஏற்படும் பாடசம்மந்தமான சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளவும், தேர்வுகளை எளிமையாக கையாளவும் ஏதுவாக நமது பணித்தளங்களில் உள்ள 5 (கன்னிகாபுரி, பூப்பாண்டியபுரம், அலைகாத்தவலசை, மருதந்தோப்பு ) கிராமங்களில் 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு மாலை நேரக்கல்வி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தாண்டு 54 +76 குழந்தைகள் இதன் வாயிலாக பயனடைந்துள்ளனர்.

இதன் விளைவாக பூப்பாண்டியபுரம் கிராமத்தில் தனியார் பள்ளியில் படித்து வந்த ஒரு குழந்தை 5ம் வகுப்பு முடித்தும் தமிழ் மற்றும் ஆங்கில எழுத்துக்கள் கூட தெரியாமல் இருந்தது

மாலைநேரக்கல்வி வாயலாக கண்டறியப்பட்டு தற்பொழுது அரசுப்பள்ளியில் சேர்த்து தொடர் கண்காணிப்பில் படிப்பில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.



## 6. பள்ளி சேர்ப்பு கூடுகைகள்:

குறிக்கோள்களின் ஒன்றாகும். அதை நிறைவேற்றும் முகமாக அனைத்துக் குழந்தைகளையும் அரசுப்பள்ளியில் சேர்க்க நாங்கள் பிரச்சாரம் மேற்கொள்கின்றோம். குறிப்பாக எங்களது பணித்தள கிராமங்கள் 52 லும் 3 வயது நிரம்பிய குழந்தைகளை அங்கன்வாடி மையத்திலும் 5 வயது நிரம்பிய குழந்தைகளை அரசு ஆரம்பப்பள்ளியிலும் சேர்க்கவேண்டும் என்று பிரச்சராம் மேற்கொள்ளப்பட்டது. இதில் 1 பள்ளி அளவிலான பள்ளி சேர்ப்பு பிரச்சாரம், 2 ஊராட்சி அளவிலான பள்ளி சேர்ப்பு பிரச்சாரம், 35 கிராம அளவிலான பள்ளி சேர்ப்பு பிரச்சாரங்கள், 1 வட்டார அளவிலான பிரச்சாரமும், 1 ஒன்றிய அளவிலான பிரச்சாரமும் நடத்தப்பட்டன. இதில் பேரணி, கருத்தரங்கம் மற்றும் துண்டு பிரசுரம் விநியோகித்தல் மூலமும் பெற்றோர் மற்றும் பொதுமக்களுக்கு கல்வியின் முக்கியத்துவம் மற்றும் அரசுப்பள்ளிகளில் சேர்க்கை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதில் 418 சிறுவர் மன்றக் குழந்தைகள், 212 பனைத்தொழிலாளர் சங்க பிரதிநிதிகள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, காவல்துறையினர், குழந்தைகள் நலக்குழுமம், சைல்டு லைன் மற்றும் அங்கன்வாடி பணியாளரகள் மற்றும் பொதுமக்கள் தன்னார்வத்துடன் கலந்துகொண்டனர்.





## 7. பள்ளி மோண்மைக் குழு கூடுகைகள்:

குழந்தைகளின் ஆரம்பக்கல்வியினை உறுதி செய்யும் நோக்குடன் இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 முழுமையாக அமல்படுத்தும்படி அரசினை நிர்பந்திக்கும் பணிகளை தொடர்ந்து செய்து வருகின்றோம். இதன் தொடர்ச்சியாக பள்ளி மேலாண்மைக்குழு பயிற்சி பெற்ற பெற்றோர்கள் மற்றும் செயல்வீரர்களுடன் இணைந்து பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டங்களில் கலந்து கொண்டு செயல்பட்டு வருகின்றோம். அதன்படி இந்த வருடம் நமது பணித்தளக் கிராமங்களில் குதிரைமொழி பாண்டியன்நகர், காவாகுளம், புல்லந்தை, பூப்பாண்டியபுரம் மற்றும் கோரவள்ளி ஆகிய 5 பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக்குழுக் கூட்டம் நடைபெற்றதில் கலந்து கொண்டு பள்ளிகளுக்கான சுற்று சுவர், வகுப்பறைகள், பாதுகாப்பான குடிதண்ணீர் வசதி, ஆண் பெண் குழந்தைகளுக்கான தண்ணீர் வசதியுடன் கூடிய தனித்தனி கழிப்பறை வசதி, பாடவாரியான ஆசிரியர்கள் நியமித்தல், குழந்தைகள் இடைவிலகல் இல்லாமல் கண்காணித்தல் மற்றும் தரமான கல்வி வழங்குதல் குறித்தும் கலந்துரையாடி தீர்மானம் இயற்றினர்.



## 9.அங்கன்வாடி மையங்கள் செயல்படுத்துதல்:

0-6 வயது குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலுட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண் குழந்தைகளின் சத்துணவு, சுகாதார பாதுகாப்பு மற்றும் 3 முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் முன்பருவக்கல்வியை உறுதி செய்ய பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. நாங்கள் பணி செய்யும் 52 கிராமங்களில் 36 கிராமங்களில் மட்டுமே அங்கன்வாடி மையம் உள்ளது. மீதம் உள்ள 10 கிராமங்களில் அங்கன்வாடி மையம் இல்லை. மேலும் அங்கன்வாடி மையங்களில் உள்கட்டமைப்பு, மற்றும் செயல்பாடுகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இதனை சீர் செய்ய இந்த வருடம் மண்டபம் ஒன்றியத்தில் அலைகாத்த வலசை, கோரவள்ளி, திருப்புல்லாணி ஒன்றியத்தில் மேதலோடை வடக்கு மற்றும் கடலாடி ஒன்றியத்தில் வெள்ளப்பட்டி, காவாகுளம் ஆகிய 5 அங்கன்வாடி மையங்களை தேர்வு செய்து பெற்றோர்கள் கண்காணிப்பின் வாயிலாக சிறப்பாக செயல்பட ஊக்குவிக்கப்பட்டது.

இவ்வாண்டு எடுக்கப்பட்ட தொடர்முயற்சியின் விளைவாக தற்பொழுது புல்லந்தை, வெள்ளப்பட்டி, தாமரையூரணி, மாணிக்கநகர், செங்கலநீரோடை, புதுமாயாகுளம், மேதலோடை (வ), பூப்பாண்டியபுரம், காவாகுளம் மற்றும் நத்தகுளம் கிராமங்களில் உள்ள அங்கன்வாடி மைங்களில் பெற்றோரின் கண்காணிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக மையத்திற்கு வருகை தராத குழந்தைகளின் வருகை பதிவு செய்வது குறைக்கப்பட்டுள்ளது. மேலும் மிகவும் எடை குறைவாக உள்ள குழந்தைகள் கண்டறியப்பட்டு சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## 10. குழந்தைத் தொழிலாளர் குழு கூட்டம்

குழந்தை தொழிலாளர் முறையினைத் தடுத்தல் மற்றும் அவர்களை மீண்டும் பள்ளியில் சேர்த்தல் எமது நிறுவனத்தின முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். இவ்வருடம் 193 முழுநேர குழந்தை தொழிலாளர்கள் எமது பணித்தள கிராமங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 80% பேர் கடலாடி ஒன்றியத்தினை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தகுந்தது. பணித்தள கிராமங்களில் உள்ள குழந்தை தொழிலாளர்களை குழந்தை தொழிலாளர் குழு (CLC) என அமைத்துள்ளோம். கடலாடி பகுதியில் 9 கிராமங்களில் குழந்தை தொழிலாளர் குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. இக்குழுக்கள் மாதம் ஒருமுறை கூடி பல்வேறு விபரங்களை விவாதிக்கின்றனர். இக்குழு செயல்பாட்டின் வாயிலாக குழந்தைத்தொழிலாளர்கள் தாங்கள் ஒரு குழந்தை என்பதை உணரும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. தன்வயது ஒத்த குழந்தைகள் பிறரிடம் பகிர முடியாத பிரச்சனைகளையும், ஆசைகளையும் தேவைகளையும் பகிர்ந்து கொள்வதுடன் புத்தகம் வாசித்தல், தொழிலாளர் நலன் மற்றும் பாதுகாப்பு சார்ந்த விபரங்களை தெரிந்துகொள்கின்றனர் இவ்வாண்டில் 22 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன இதில் 22+26=48 ஆண் பெண் குழந்தைகள் பங்கேற்று பயனடைந்துள்ளனர்.

குழந்தைத்தொழிலாளர்களுக்கான திறன்வளர் பயிற்சி 04-10-2019 அன்று சாயல்குடி பதனீர் மஹாலில் நடைபெற்றது. திருமதி.பர்வதவர்த்தினி அவர்கள் சிறப்பு பயிற்சியளித்தார்.

குழந்தைத்தொழிலாளர் குழுக்கூட்டங்களில் குழந்தைகள் கலந்து கொள்வதன் விளைவாக தனது சகோதர சகோதரிகளின் படிப்பின் மீது மிகுந்த அக்கறையுடன் உள்ளனர்.





## 11. குழந்தைத் தொழிலாளர்கள் பெற்றோர் குழு

குழந்தைத் தொழிலாளர் முறையினை தடுப்பதற்காக எமது நிறுவனம் பல்வேறு வகையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக குழந்தைத் தொழிலாளர் பெற்றோர்களை ஒரு குழுவாக உருவாக்கியுள்ளோம். இக்குழுவானது பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் கூடுதல் புரிதல் ஏற்படுத்தவும் பெற்றோர்களிடம் உறவினை மேம்படுத்தவும் உதவுகின்றது.

இவ்வாண்டு 1.கீழவலசை, 2.கன்னிகாபுரி, 3.ந.காமராஜபுரம், 4.மாணிக்கநகர், 5.பூப்பாண்டியபுரம், 6.கீழஅல்லிக்குளம், 7.இழந்தைக்குளம், 8.வெள்ளப்பட்டி, 9.குதிரைமொழி பாண்டியநகர், 10. காந்திநகர் மற்றும் 11.தாவுகாடு மற்றும் 12. அலைகாத்தவலசை ஆகிய கிராமங்களில் குழந்தைத் தொழிலாளர்கள் பெற்றோர் குழு அமைக்கப்பட்டு மாதம் ஒரு முறை கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்

தில் குழந்தைகளுக்காக நாம் நேரத்தை ஒதுக்கி அவர்கள் வேலை செய்யும் இடங்களில் நடைபெறும் விபரங்களை பகிர்ந்து கொள்ள முன் வர வேண்டும் போன்ற கருத்துக்கள் பகிரப்பட்டன. மேலும் இக்கூட்டத்தில் 6+98 பெற்றோர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

## 12. குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்புதினம் - பேரணி — கருத்தரங்கம்

குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினம் 14.06.2019 அன்று மாவட்ட அளவில் ஒருங்கிணைப்பட்டது. இராமநாதபுரம் ஜனார்த்தனன் மாளிகையில் கருத்தரங்கு கூட்டம் நடைபெற்றது. இதில் திரு.சங்கர் - தொழிலாளர் நலத்துறை ஆய்வாளர், இராமநாதபுரம், திரு.துரைமுருகன் - மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், இராமநாதபுரம், திரு.துரைராஜ் - மாவட்ட குழந்தைகள் நலக்குழுமம், திரு.கருப்பசாமி — சைல்டுலைன், திரு.தேவராஜ் - ஸ்பீடு டிரஸ்ட் - தேவிபட்டிணம்,, பெற்றோர்கள், பனைத்தொழிலாளர் சங்க பிரதிநிதிகள், முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் மற்றும் பிரதிநிதிகள். காவல்துறையினர் சைல்டு லைன் பொறுப்பாளர், பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர் நலத்துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் என 180க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். பேரணியை திரு.சங்கர் - தொழிலாளர் நலத்துறை ஆய்வாளர், இராமநாதபுரம், அவர்கள் துவக்கி வைத்தார். ஜனார்த்தனன் மாளிகையிலிருந்து தொடங்கிய பேரணி இராமநாதபுரம் மாவட்ட அரசு மருத்துவமனை சாலை வழியாக சென்று வழிவிடு முருகன் கோவில் அருகில் முடிவடைந்தது.






## 13. ஊராட்சி அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழுக்கூட்டம் :

சென்ற ஆண்டில் நடைபெற்ற குழந்தைத்தொழிலாளர் கலந்தாலோசனைக்கூட்டம் மற்றும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் சந்திப்பின் விளைவாக இந்த ஆண்டு கன்னிராஜபுரம், மேதலோடை, மூக்கையூர், நரிப்பையூர், பிள்ளையார்குளம், காஞ்சிரங்குடி, இருமேனி, கோரவள்ளி மற்றும் புதுவலசை ஆகிய 10 ஊராட்சிகளில் ஊராட்சி அளிவலான குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கூட்டம் செயல்பாட்டிற்கு வந்துள்ளது. இதில் கிராம நிர்வாக அலுவலர், ஊராட்சி செயலர், காவல் துறையினர், பள்ளி தலைமை ஆசிரியர்கள், கிராம சுகாதார செவிலியர், அங்கன்வாடி ஆசிரியர்கள், பெற்றோர், கிளைச்சங்க செயல்வீரர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் உறுப்பினர்களாக பங்கெடுத்தனர்.

அதன் தொடர் நிகழ்வாக ஊராட்சி அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழு கூட்டத்தில் நமது கிளைச்சங்க செயல்வீரர்கள் பங்கெடுக்கும் விதமாக அவர்களுக்கு குழந்தைகளுக்கான பிரச்சனைகள், அவற்றை கையாளும் விதம் மற்றும் குழந்தை பாதுகாப்பு சட்டங்கள் குறித்து பயிற்சியளிக்கப்பட்டது.

இப்பயிற்சியின் விளைவாக கீழஅல்லிகுளம் கிராமத்திலிருந்து தினமும் 8 கி.மீ பாதுகாப்பில்லாமல் ஆட்டோவில் பயணித்து தனியார் பள்ளிக்கு சென்று வந்த குழந்தைகளை தற்பொழுது பாதுகாப்பு மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியம் கருதி கீழஅல்லிகுளத்தில் உள்ள கடலாடி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சேர்த்துள்ளனர்.





## 14.கிராமசபை கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்:

குழந்தைகளின் கல்வி மற்றும் சுகாதாரப்பிரச்சனைகளைத் தீர்க்கும் முகமாக பனைத்தொழிலாளர் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் மற்றும் கிராம தன்னார்வலர்கள் கிராமசபைக் கூட்டங்களில் கலந்துகொண்டு அது தொடர்பான விவாதங்களில் ஈடுபட்டு குழந்தைகள் மேம்பாட்டுக்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வலியுறுத்துகின்றனர்.

1. குழந்தை தொழிலாளர் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும், குழந்தைத் திருமணம் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும், பள்ளி இடைவிலகல் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும் ஆகிய தீர்மானங்கள் காஞ்சிரங்குடி கிராம சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

2. கீழஅல்லிக்குளம் கிராமத்திற்கு குழந்தைகள் பள்ளிக்குச் சென்று வர மேம்பாலத்துடன் கூடிய சாலைவசதி செய்யப்படும், குழந்தை தொழிலாளர் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும், குழந்தைத் திருமணம் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும், பள்ளி இடைவிலகல் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும் அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டிடம் பெறுதல் ஆகிய தீர்மானங்கள் பிள்ளையார்குளம் கிராம சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

3. குழந்தைகள் 18 வயது வரை தொடர்ந்து கல்வி கற்க வேண்டும் குழந்தை தொழிலாளர் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும், குழந்தைத் திருமணம் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும், பள்ளி இடைவிலகல் இல்லாத ஊராட்சியாக காக்கப்படும் மற்றும் குழந்தைகள் பாதுகாப்புக் குழுவை உருவாக்குதல் ஆகிய தீர்மானங்கள் மூக்கையூர் கிராம சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

4. குழந்தைத் திருமணம் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும், பள்ளி இடைவிலகல் இல்லாத ஊராட்சியாக தக்கவைக்கப்படும் மற்றும் குழந்தைகளை துன்புறுத்துதலிலிருந்து பாதுகாக்க வேண்டும் ஆகிய தீர்மானங்கள் மாரியூர் கிராம சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.





### 15. குழந்தைத் திருமணத்தை தடுத்தல்:

வரதட்சனையின் தீமைகள் விளைவுகளால் பல பெண்களின் வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக நமது பணித்தள கிராமங்களில் பல்வேறு கிராமங்களில் இளவயது திருமணம் நடைபெற்றுள்ளது. எனவே இளவயது திருமணத்தைத் தடுக்கவும் அது குறித்துப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் 52 பனைத்தொழிலாளர் சங்க கூட்டங்கள் மற்றும் 10க்கும் மேற்பட்ட ஊராட்சி கிராமசபைக் கூட்டங்களில் இது தொடர்பாக தீர்மாணங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

### 16. இடம்பெயர்ந்த குடும்பங்கள் ஆய்வு :

இவ்வாண்டில் பனைத்தொழிலாளர்கள் இடம்பெயர்ந்த 3 இடங்களில் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இதில் மொத்தம் 119 குடும்பங்கள் சந்திப்பட்டது. இக்குடும்பங்களில் 0-5 வயதில் 6+6=12 குழந்தைகளும், 6-18 வயதில் 59+63=122 குழந்தைகளும், 7+10=17 குழந்தைகள் குழந்தைத்தொழிலாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்

மேலும் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கை வெளியீட்டின் செயல்பாடுகள், கண்டறியப்பட்ட தகவல்கள் மற்றும் வெளிக்கொணரப்பட்ட பிரச்சனைகள் குறித்து இடம்பெயர்ந்த இடங்களில் பெற்றோர்களை ஒருங்கிணைத்து கூட்டம் நடத்தப்பட்ட விளக்கம் அளிக்கப்பட்டது.



## 17. வீடு சந்திப்பு

பெற்றோர்களிடம் பள்ளி இடைவிலகல், குழந்தைத் தொழிலாளர் முறை, குழந்தைத் திருமணம் ஆகியவற்றைக் குறித்து அதிகமான விழப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் அவர்களை நேரடியாக வீடுகளில் தனித்தனியாக எமது பணியாளர்கள் சந்திக்கின்றனர். இதில் ஒரு குடும்பத்தில் உள்ள அனைவருடனும் நெருக்கமான உறவு எற்பட வாய்ப்பு உள்ளது. இதனால் குழந்தைகளின் உரிமைகள் தொடர்பாக அனைவருக்கும் புரிதல் ஏற்பட்டுள்ளது. இவ்வாண்டில் 12252 குடும்பங்களை சந்தித்துள்ளோம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் விளைவாக கீழவலசை கிராமத்தில் கடந்த 3 வருடங்களாக குழந்தைத்தொழிலாளராக இருந்த ஒரு பெண்குழந்தை தொடர்ந்து ஆற்றுப்படுத்தியதின் விளைவாக இந்த வருடம் மீண்டும் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேலும் வேப்பமரத்துப்பனை கிராமத்தில் ஒரு குழந்தைத்திருமணம் கண்டறியப்பட்டு தடுக்கப்பட்டுள்ளது.

### 18.பனைத்தொழிலாளர் நல வாரியம் மூலம் பெறப்பட்டக் கல்வி உதவித் தொகை பட்டியல்:

| பயனாளிகள் | மொத்தக் குழந்தைகள் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 10ம் வகுப்பு | 0+23 | 1000 x 23 | 23000 |
| 10ம் வகுப்பு தேர்ச்சி | 25+16 | 1000 x 41 | 41000 |
| 11ம் வகுப்பு | 0+18 | 1000 x18 | 18000 |
| 12ம் வகுப்பு | 20+18 | 1500 x 18 | 22000 |
| 12ம் வகுப்பு தேர்ச்சி | 9+14 | 1500 x 23 | 34500 |
| இளங்கலைப் பட்டம் | 12+35 | 1500 x 47 | 70500 |
| முதுகலைப் பட்டம் | 1+3 | 4000 x4 | 16000 |

| | | | |
|---|---|---|---|
| இளங்கலை பொறியியல் | 9+7 | 6000 x 16 | 96000 |
| முதுகலை பொறியியல் | 0 | 0 | 0 |
| பாலடெக்னிக் | 4+1 | 1000 x5 | 5000 |
| மொத்தம் | **77+135** | **212** | **326000** |

## 19. சிறுவர் மன்றம் - வட்டாரக்கூட்டம்

சிறுவர் மன்றங்கள் வட்டாரங்களாக ஒருங்கிணைக்கப்பட்டு வட்டாரக்கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. குழந்தைகளின் பங்களிப்பினை விரிவாக்கவும் அவர்களுக்கு புதிய புரிதல்களை கொடுக்கவும் இம்மன்றங்கள் வட்டாரமாக இணைக்கப்பட்டுள்ளது. கோரவள்ளி, கீழக்கரை, உச்சிப்புளி, , நரிப்பையூர், காவாகுளம், மாயாகுளம், மற்றும் திருப்புல்லானி ஆகிய சிறுவர் மன்ற வட்டாரங்கள் உள்ளது.

**வட்டாரக் கூட்டம் நடைபெற்ற விபரம்:**

| வ.எண், | வட்டார பெயர் | நாள் & இடம் |
|---|---|---|
| 1 | கீழக்கரை | 26-04-2019, 29-09-2019 — செங்கலநீரோடை |
| 2 | மாயாகுளம் | 21-04-2019 — புதமாயாகுளம் |
| 3 | கன்னிராஜபுரம் | 22-04-2019 — மாசானபுரம்<br>06-10-2019 — கன்னிராஜபுரம் |
| 4 | காவாகுளம் | 25-04-2019 — அடஞ்சேரி |
| 5 | கோரவள்ளி | 19-05-2019 — வெள்ளரிஓடை<br>08-09-2019 — கும்பரம்<br>17-03-2019 — கோரவள்ளி |
| 6 | உச்சிப்புளி | 25-04-2019 — புதுவலசை<br>25-06-2019 — குயவன்குடி<br>12-10-2019 - குயவன்குடி |
| 7 | திருப்புல்லாணி | 21-04-2019 — உமையன்வலசை<br>29-09-2019 — KKK வலசை |





## 20. கணினி மையம்

நரிப்பையூர் நாடார் மகாஜன சபைக்கு சொந்தமாக கட்டிடத்தில் 16-08-2019 அன்று ஆரம்பிக்கப்பட்ட கணினிமையம் குழந்தைகளின் பங்கேற்பிற்கு இடையூறாக இருந்ததை கருத்தில் கொண்டு தற்பொழுது பூப்பாண்டியபுரம் கிராமத்திற்கு மாற்றப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. பள்ளி நாட்களில் மாலை நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும் குழந்தைகள் கணினி மையத்திற்கு சென்று இலவசமாக கணினிக்கல்வியை கற்று வருகின்றனர். குழந்தைத்தொழிலாளர்களும் ஆர்வமுடன் சென்று கணினிக்கல்வியை கற்கின்றனர்.




## 21. அறிவியல் செயல்பாட்டு கல்வி

இவ்வாண்டு குழந்தைகளின் கல்வி செயல்பாடுகளின் சிறப்பான ஒரு நிகழ்வாக பள்ளிக்குழந்தைகள் அறிவியலை எளிதாக கற்கும் நோகத்தில் மூன்று ஒன்றியங்களிலும் மூன்று அரசு மேல்நிலைப்பள்ளிகள் தேர்வு செய்யபட்டு சிறப்பு வல்லுநர் மூலமாக அறிவியல் செயல்பாடுகள் நிகழ்த்தி காண்பிக்கபட்டன. இந்த முறை மிகவும் பயனுள்ளதாக இருந்ததாக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தெரிவித்தனர்.




## 21. புதிய ஆரம்பப்பள்ளி

செங்கலநீரோடை கிராமத்தில் உள்ள 5 முதல் 10 வயது வரையிலான குழந்தைகளின் ஆரம்பக்கல்வியினை உறுதி செய்வது எமது நிறுவனத்தின் மிக முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக உள்ளது. செங்கலநீரோடை கிராமம் காஞ்சிரங்குடி ஊராட்சி, கீழக்கரை நகருக்கு அருகில் உள்ளது. இக்கிராமத்தில் மொத்தம் 250 மக்களும் 3 முதல் 5 வயது குழந்தைகள் 52 பேரும் உள்ளனர். இங்கு ஆரம்பப்பள்ளி இல்லாத காரணத்தால் குழந்தைகள் கீழக்கரை நகருக்கு 12 கி.மீ. தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளது, ஏனெனில் இக்கிராமத்திற்கு பேருந்து வசதியும் செய்து தரப்படவில்லை. இச்சூழல் 5-10 வயது குழந்தைகள் பள்ளி இடைவிலகலாவதை மேலும் அதிகரிக்கின்றது.

இப்பிரச்சனைகள் தொடர்பாக கிராம பிரதிநிதிகள் அடங்கிய கல்வி மேம்பாட்டுக் குழு பல்வேறு நடவடிக்கைகளை கடந்த இரண்டு ஆண்டுகளாக எடுத்து வருகின்றது. குறிப்பாக செங்கலநீரோடை கிராமத்தினர் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் வழக்குத்தொடர்ந்து புதிய ஆராம்பப்பள்ளி பெறுவதற்கான உயர்நீதிமன்ற ஆனை பெற்றுள்ளனர்.



**இவ்வாண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:**

- 21-06-2019 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையத்தின் வாயிலாக நடைபெற்ற பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் முகாமில் செங்கலநீரோடை கிராமத்திற்கு புதிய ஆரம்பப்பள்ளி வேண்டி மனு அளிக்கப்பட்டது.
- சென்னை தலைமை செயலகம் சென்று கல்வித்துறை செயலாளர் திரு.பிரவீன் யாதவ் அவர்களை சந்தித்து செங்கலநீரோடை கிராமத்திற்கு புதிய ஆரம்பப்பள்ளி வேண்டி மனுக்கொடுக்கப்பட்டது.
- அதன் தொடர்ச்சியாக செங்கலநீரோடை கிராமத்திற்கு புதிய ஆரம்பப் பள்ளி கோரி மீண்டும் மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு அளிக்கப்பட்டது.



## 22. அலைபேசி - தகவல் மேலாண்மைத் திட்டம் குறித்த பயிற்சி

சென்ற ஆண்டிண் தகவல் மேலாண்மைத் திட்டம் குறித்த பயிற்சியின் தொடர்ச்சியாக களப்பகுதிகளில் தொகுத்த விபரங்களை அலைபேசி வாயிலாக பதிவேற்றம் செய்வதற்கு பணியாளர்களுக்கு 6 கையகல அலைபேசிகள் (Tabs) CRY நிறுவனத்திலிருந்து நன்கொடையாக வழங்கப்பட்டு களப்பகுதிகள் குறித்த தகவல்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

## 23. பனைத்தொழிலாளர்சங்கம் - வட்டார கூட்டம்:

பனைத்தொழிலாளர்களின் வளர்ச்சியினை உறுதி செய்யும் நோக்குடன் பனைத் தொழிலாளர் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இச்சங்கம் கிராம அளவில் உருவாக்கப்பட்டு, வட்டாரமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் தலைமை சங்கம் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு மட்டத்திலும் 1 தலைவர், 1 துனைத் தலைவர், 1 செயலாளர், 1 இணைச் செயலாளர் மற்றும் 1 பொருளாளர் ஆகியோர் அடங்கிய நிர்வாகக் குழு உள்ளது. கிராமச் சங்கம் மாதம் ஒரு முறையும், வட்டாரச் சங்கம் இரண்டு மாதத்திற்கு ஒரு முறையும் மாவட்டச் சங்கம் ஆண்டுக்கு ஒரு முறையும் கூடுகின்றது.

| வ.எண் | வட்டார பெயர் | நாள் & இடம் | கலந்து கொண்டவர்கள் விபரம் |
|---|---|---|---|
| 1 | கீழக்கரை | 28-04-2019 — செங்கலநீரோடை | 3+24=27 |
| 2 | கீழக்கரை | 22-09-2019 — அலைவாய்க்கரைவாடி | 2+22=24 |
| 3 | கோரவள்ளி | 28-04-2019 — கே.பி.வலசை | 1+54=55 |
| 4 | கோரவள்ளி | 03-06--2019 — கும்பரம் | 1+23=24 |
| 5 | கோரவள்ளி | 15-09-2019 — வெள்ளரிஓடை | 2+20=22 |
| 6 | கோரவள்ளி | 15-10-2019 — கடுக்காய்வலசை | 3+34=37 |

| | | | |
|---|---|---|---|
| 7 | திருப்புல்லாணி | 06-10-2019 ___ மேதலோடை(வ) | 2+21=23 |
| 8 | உச்சிப்புளி | 13-10-2019 ___ அலைகாத்தவலசை | 4+22=26 |

**திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் பணியாளர்களின் பிற பங்கேற்புகள் :**

14-05-2019 ___ 18-05-2019 ___ பெங்களூர் CRY அலுவலகத்தில் நடைபெற்ற அலைபேசி தகவல் பதிவேற்றம் குறித்தான பயிற்சியில் ஒருங்கிணைப்பாளர் திருமதி.து.கனகவள்ளி, குழந்தைத் தொழிலாளர்கள் ஒருங்கிணைப்பாளர் திருமதி.ம.மரிய ஸ்டெல்லா ஆகியோர் கலந்துகொண்டனர்.

17,18-09-2019 அன்ற சென்னை தலைமை செயலகம் சென்று கல்வித்துறை செயலாளர் திரு.பிரவீன் யாதவ் மற்றும் கல்வி அமைச்சர் திரு.செங்கோட்டையன் அவர்களை சந்தித்து செங்கலநீரோடை கிராமத்திற்கு புதிய ஆரம்பப்பள்ளி வேண்டி மனுக்கொடுக்கப்பட்டது.

21,22,23-12-2019 ஆகிய மூன்று நாட்கள் மதுரை பில்லர் ஹாலில் நடைபெற்ற அலைபேசி தகவல் பதிவேற்றம் குறித்தான பயிற்சியில் ஒருங்கிணைப்பாளர் திருமதி.து.கனகவள்ளி, அலைபேசி தகவல் பதிவேற்றம் குறித்தான பயிற்சியில் ஒருங்கிணைப்பாளர் திருமதி.து.கனகவள்ளி, மற்றும் அனைத்து களப்பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

**இயக்குநர் அவர்களின் பிற செயல்பாடுகள் :**

13-04-2019 அன்று இந்திய ஜனநாயக முஸ்லீம் முன்னேற்ற கழக வேட்பாளர் திரு.நவாஸ்கனி அவர்களை சந்தித்து குழந்தைகளின் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு, வாழ்வாதாரம் குறித்து கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

15-04-2019 அன்று மணக்குடி சென்று அம்மா மக்கள் முன்னேற்ற கழக வேட்பாளர் திரு.ந.ஆனந்த் அவர்களை சந்தித்து குழந்தைகளின் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு, வாழ்வாதாரம் குறித்து கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

10-05-2019 அன்று மதுரை மாவட்டம் பேரையூர் மேலப்பட்டியில் நடைபெற்ற கூட்டப்பனை கூடுகையில் கலந்து கொண்டு பனை சான்றோர் விருது பெறப்பட்டது.

15-05-2019 அன்று சென்னை இக்சா மையத்தில் நடைபெற்ற சமகல்வி இயக்க கூடுகையில் கலந்து கொண்டு எதிர்கால திட்டமிடல் நடைபெற்றது.

20-06-2019 அன்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் நிர்வாகிகளால் நடத்தப்பட்ட தொண்டு நிறுவனங்களின் ஆலோசனைக் கூடுகையில் கலந்து கொண்டேன்.

21-06-2019 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையத்தின் வாயிலாக நடைபெற்ற பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் முகாமில் கலந்து கொண்டேன்.

26-06-2019 அன்று திருச்சி டல்ஹவுஸ் பயிற்சி மையத்தில் சமகல்வி இயக்கத்தின் வாயிலாக நடைபெற்ற கல்விக்கொள்கை ___ 2019 மாநில அளவிலான கலந்தாய்வு கூடுகையில் கலந்து கொண்டேன்.

17,18-07-2019 சேலம் மக்கள் அலுவலகத்தில் நடைபெற்ற சமகல்வி இயக்கம் தோன்றிய கால வரலாறு மற்றும் அனுபவப் பகிர்வு கூடுகையில் கலந்து கொண்டேன்.

20-07-2019 மதுரை மேலூர் கந்தம்பட்டிஅஸ்வரா உளவியல் கல்லூாயில் நடைபெற்ற பனைத்தொழில் பயிற்சி தொடக்க விழாவில் கலந்து கொண்டேன்.

14,19-08-2019 மதுரை வருமானவரி அலுவலகம் சென்று வருமானவரி விலக்கு சம்மந்தமாக பேசப்பட்டது.

16-09-2019 அன்று சென்னை இக்சா மையத்தில் நடைபெற்ற சமகல்வி இயக்க கூடுகையில்லெ கலந்து கொண்டு நடப்பாண்டு செயல்பாடுகள் மற்றும் அடுத்த ஆண்டு திட்டமிடல் நடைபெற்றது.

17,18-09-2019 அன்ற சென்னை தலைமை செயலகம் சென்று கல்வித்துறை செயலாளர் திரு.பிரவீன் யாதவ் மற்றும் கல்வி அமைச்சர் திரு.செங்கோட்டையன் அவர்களை சந்தித்து செங்கலநீரோடை கிராமத்திற்கு புதிய ஆரம்பப்பள்ளி வேண்டி மனுக்கொடுக்கப்பட்டது.

24-10-2019 பெங்களுரில் நடைபெற்ற தேசிய கல்விக்கொள்கை -2019 கூடுகையில் கலந்து கொண்டேன்.

16-011-2019 சென்னை மெட்ராஸ் இலக்கிய சமூகக் கல்லூரி சாலையில் நடைபெற்ற தமிழ்நாடு அமைப்பு சாரா தொழிலாளர் ஆய்வு அறிக்கை வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு ஆய்வு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டது.

13-01-2020 அன்று கோவை YMCA வளாகத்தில் நடைபெற்ற சமகல்வி இயக்க கூடுகையில்லெ கலந்து கொண்டு எதிர்கால திட்டமிடல் நடைபெற்றது.

18,19,20,21-02-2020 பெங்களுரில் நடைபெற்ற cry பங்காளர்கள் கூடுகையில் கலந்து கொண்டேன்.

------------------------------ * -------------------------------------